சப்பிரகமுவ மாகாண கல்வித்திணைக்களம் - பாடச்சுருக்கம்

பாடம் - சித்திரம்

வாரம் - ஜனவரி 4ம் வாரம்

தரம் - 10

ஆசிரியை - கே. அழகேஸ்வரி

Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa

**தேர்ச்சி 2.0** : சுற்றாடலில் காணப்படும் பொருட்களை திரட்டி சித்திரம் வரைவார்

**தேர்ச்சி மட்டம் 2.1** : இயற்கை மற்றும் மனிதனால் ஆக்கப்பட்ட பொருட்களை அவதானித்து சித்திரம் வரைவார்

**செயற்பாடு 2.1.2** : செங்கல், வாளி, பூச்சாடியில் இடப்பட்ட அந்துாரியம், தேங்காய் என்பவற்றை அவதானித்து வரைவோம்

**சித்திரம் வரையும் போது கருத்தில் கொள்ளவேண்டியவை**

செங்கல், வாளி, பூச்சாடியில் இடப்பட்ட அந்துாரியம், தேங்காய் என்பவற்றை பொருத்தமாக தளமொன்றில் வைத்து அவதானித்தல்

பொருட்களை இரேகையில் வரைதல் இதன்போது பொருட்களை தனித்தனியாகவும் வரையமுடியும்

இரேகையில் வரைந்த பொருட்களில் ஒளிநிழல், முப்பரிமாணம் வெளிப்படுமாறு நிழற்றிக் கொள்ளல்

இதனை பயிற்சி செய்த பின் பொருட்களை கூட்டாக வரைந்து வர்ணம் தீட்டுதல்

வரையும் போது அளவுப்பிரமாணம், துாரதரிசனம், பொருளின் தோற்றம் என்பவற்றை பின்பற்றி வரைதல்

பொருட்களுக்கு வர்ணம் பூசுதலின் போது ஒளிநிழல், முப்பரிமாணம், பொருளின் புறவியல்பு என்பன வெளிப்படுமாறு வர்ணம் பூசுதல்

ஒளிநிழலை காட்டுவதற்கு கடுமையான, மென்மையான வர்ணங்களை பூசலாம்

புறவியல்பை சரியாக வெளிப்படுத்துவதற்கு பொருத்தமான வரணத்தையும் வர்ணபேதங்களையும் பயன்படுத்த வேண்டும்

பின்னர் தளம், மற்றும் பின்னனிக்கு ஏற்ற பொருத்தமாக வர்ணங்களை பயன்படுத்துதல்

சித்திரத்தை பூரணப்படுத்துதல்

இதன்போது சித்திரத்தின் நேர்த்தி, அழகு, கலைநயம், நுட்பமுறை என்பன காணப்படுதல் வேண்டும்.









உசாத்துணை - m.youtube.com,
சித்திர கலை பொருட்கூட்டம் புத்தகம் - திலகரத்ன திகன்வெல